Source: *Tamil Murasu*, p3
Date: 7 May 2020

# சமுதாயத்திற்குப் பலன் தரும் யோசனைகளுக்காக $6 மி. நிதி

சமுதாயத்திற்குப் பலனளிக்கும் யோசனைகளை வழங்கும் பட்டதாரிகளுக்காக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் $6 மில்லியன் நிதியை ஒதுக்கியுள்ளது. புத்தாக்க சவால் எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் 2018, 2019, 2020ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்ற, பெறும் மாணவர்கள் தரும் யோசனைகளைக் கொண்டு பல்கலைக்கழகம் 115 புத்தாக்கத் திட்டங்களை வடிவமைக்கவுள்ளது.

பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு 115 ஆண்டுகளானதைக் கொண்டாடும் விதமாக இத்திட்டம் அமைகிறது.

இதன்வழி வரும் சிறப்பான யோசனைகளுக்கு பல்கலைக்கழகம் ஆறு மாதங்களுக்கு $50,000 பெறுமானமுள்ள நிதி ஆதரவு வழங்கும். மேலும், யோசனைகள் புத்தாக்கத் திட்டமாக செயல் வடிவம் பெறும்போது பல்கலைக்கழகம் கூடுதல் நிதி ஆதரவை வழங்கும்.

வருங்காலத்தில் மானிட சமுதாயத்தைச் சிறப்புமிக்கதாக ஆக்கும் நோக்கில் முற்போக்கான யோசனைகளை முன்வைக்க பட்டதாரிகள் குழுவாகச் செயல்பட அழைக்கப்படுகின்றனர்.

சிறப்பான மக்கள் சமுதாயத்தை உருவாக்குதல், சிறப்பான சமுதாயத்தை உருவாக்குதல், சிறப்பான உலகத்தை உருவாக்குதல் ஆகிய மூன்று பிரிவுகளில் பலதரப்பட்ட யோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

வீட்டிலிருந்து கல்வி கற்பது, ஒன்றிணைந்து வாழ்வதை ஊக்குவிப்பது, சமுதாய ஏற்றத்தாழ்வைச் சரிசெய்வது, பருவநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் குறைப்பது, உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வது, கொவிட்-19 கிருமித்தொற்றுக்குப் பிந்திய காலத்தை பாதுகாப்பாக வைத்து இருப்பது ஆகியவை தொடர்பாக பட்டதாரி மாணவர்கள் தங்கள் யோசனைகளைச் சமர்ப்பிக்கலாம்.

இதில் சிங்கப்பூருக்கும் உலகுக்கும் மிக முக்கியமாக விளங்கும் சவால்களுக்கு தீர்வாக அமையக்கூடிய யோசனைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்தத் திட்டத்தில் பங்குபெறும் மாணவர்கள் மூன்றிலிருந்து ஐந்து பேர் அடங்கிய குழுவாகச் செயல்படலாம். தேர்வுபெறும் திட்டத்திற்கு $50,000 வரை நிதி ஆதரவு வழங்கப்படும். அதிலிருந்து திட்டம் செயல் வடிவம் பெறும் காலத்திற்கு குழுவிலிருக்கும் ஒவ்வொருவரின் செலவுக்கும் மாதம் $1,200ஐ அவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்மூலம் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக பட்டதாரிகள் சமுதாய நலனுக்கு பங்களிக்க அருமையான ஒரு வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்று பல்கலைக்கழகத்தின் தலைவர் திரு டான் எங் சாய் கூறியுள்ளார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.